1973 டிசம்பர் 3]

திரு. ஆ. பரந்தாமன் : திருத்தணி திருமுருகன் ஆலயத்தில் சேர்த்து வைத்திருந்த பொன்னே சில மாதங்களுக்கு முன்னுல் பம்பாய் மாநிலத்தில் உருக்கினுர்கள் என்று கேள்விப்பட்டோம். அப்படி உருக்கப்பட்ட பொன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றிய விவரம் இல்லே. தனிக் கேள்வி போடவேண்டும்.

வீரவநல்லூர் அருள்திரு பூமிநாதசுவாமி கோயில் அறங்காவலர்கள்

*** 598 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் என்னும் ஊரில் உள்ள அருள்திரு பூமிநாதசுவாமி கோயில் சிறுகாலசந்தி கட்டளேயில் உள்ள அறங்காவலர் பதவிகள் 23—5—1973 முதல் நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) இப்பதவிகள் 23—7—1973 முதல் காலியாக உள்ளன. இவற்றை நிரப்ப, உரிய நடவடிக்கைகள் இந்து சமய அறநிலேய ஆட்சித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வெள்ளிக்குறியிடப்படாத வினுக்கள்.

அரசு ஊழியர்களுக்கு மலேவாசப்படி.

1 வினு—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு அண்மையில் மலேவாசப்படி உயர்த்தப்பட்டு உள்ளதா?

விடை—

இல்லே.